**O.S. No.3/2015**

Date : 19**.11.2019.**

வாசா.3 - திரு. அழகர்சாமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -**

நான் பொள்ளாச்சியில் குடியிருக்கிறேன். என்னுடைய முதல் சாட்சியத்தில் நான் சிலமலையில் குடியிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தால், எனது ஆதார் கார்டு மற்றும் ரேசன் கார்டு இரண்டும் சிலமலை விலாசத்தில் இருப்பதால், அந்த விலாசத்தை கொடுத்துள்ளேன். எனக்கு 2005-ல் திருமணம் நடந்தது. எனக்கு ஒரு பெண் குழந்தை. எனது பெண் குழந்தை தற்போது பொள்ளாச்சியில் படித்து வருகிறார். ராஜேஸ்வரி என்பவரை எனக்கு சிறு வயதில் இருந்தே தெரியும். காரணம் ராஜேஸ்வரி எனது தாயாருக்கு சின்ன பாட்டி மகள் முறை ஆகும். மேலும் எனது தாயாரின் தாய் மாமனின் மனைவியும் ஆவார். சொத்துக்கள் வாங்கும்பொழுதோ, விற்கும்பொழுதோ, சிவசாமியும் ராஜேஸ்வரியும் என்னிடம் கலந்து ஆலோசித்ததில்லை. காரணம் அப்பொழுது எனக்கு சிறு வயது. நான் பெரியவன் ஆன பின்னிட்டு சொத்துக்களை பற்றி எந்த ஆலோசனையும் என்னிடம் கேட்டதில்லை. தாவாவில் தாக்கல் செய்யப்பட்ட உயிலை நான் பார்த்ததில்லை. அந்த உயில் தவறான உயில் என்று ஒரு அனுமானத்தின் அடிப்படையில் தான் நான் கூறுகிறேன் என்றால் சரிதான். ராஜேஸ்வரி தாவா உயிலை பற்றி என்னிடம் எந்த விதத்திலும் தெரிவித்ததில்லை. நான் தாக்கல் செய்த வாசாஆ.17-ல் எனது விலாசத்தில் C/o.K.சிவசாமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக விலாசத்தில் C/o என்று போட்டால், அது ஏற்புடையதா என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை சிவசாமி ராஜேஸ்வரியுடன் நான் கூட்டாக அனுபவித்திருந்தால் C/o என்று விலாசத்தில் போட வேண்டிய அவசியமில்லை என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. எனது திருமணம்

முடிந்து ஒரு வருடம் பழனியில் குடியிருந்தோம். அதற்கு பின்பு பொள்ளாச்சியில் குடியேறினோம். 2011, 2012-ல் எனது பெரியம்மாவுக்கு உடல்நிலை சரியில்லை என்று, KTK காலனி, சொக்கர் தெரு, தேனி என்ற எனது பெரியம்மா முகவரியில் குடியேறினோம். 2012, 2014-ல் எனது குழந்தை 1ஆம் வகுப்பு அல்லது 2ஆம் படித்துக்கொண்டிருந்திருப்பார். தேனியில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் தான் படித்தார். எனது மகள் தேனியில் படித்தார் என்று காட்டுவதற்கு ஆதாரமான நான் நீதிமன்றத்தில் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை. நான் கூறுவது தவறு என்றும், நான் தேனியில் குடியிருக்கவில்லை என்றும், எனது மகள் தேனி பள்ளியில் படிக்கவே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக தேனியில் குடியிருந்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வாசாஆ.18 ஆதார் கார்டு வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

1வது பிரதிவாதியின் தரப்பு குறுக்கு விசாரணையை 2,3 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொண்டு குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

Sd./ G. Vijaya
முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.